**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் (கூறு 1 – மாகாண பகுதி) - 2023**

---

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (கூறு 1 – மாகாண பகுதி) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (MPAHAPCLG) மாகாணங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சாக உள்ளதுடன் ஒன்பது மாகாண கல்வி அமைச்சுக்கள் இச்செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக உள்ளதுடன் ஐடிஏ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தில் உள்ள 04 பாடசாலைகளில் தரம் 10 மற்றும் 11 இல் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் பெற்ற சராசரி புள்ளிகள் 41 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. அவர்களால் செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்டவாறு முதல் இரண்டு வழங்கல் இணைப்பு குறிகாட்டிகளை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | குழந்தைகள் குறிப்பாக ஆங்கிலம் போன்ற மொழியை வளர்ப்பதற்கு இது போன்ற ஆங்கில அலகுகள் பெரும் உதவியாக இருக்கும். ஆனால் பரீட்சைகளின் மூலம் திறனை அளவிட முடியாது என்பதுடன் கணிதத்தின் நடைமுறை அறிவும் இதே நிலையில் உள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாணத்தின் பாடப் பணிப்பாளர்களுக்காக மடிக்கணனிகளை கொள்வனவு செய்வதற்கு 2022 ஆம் ஆண்டில் ரூபா 6 மில்லியன் தொகை செலவிடப்பட்டது. எனினும், இந்த மடிக்கணனிகள் செயற்திட்டத்தின் நோக்கங்களை நேரடியாக அடைந்துகொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணித ஆய்வுகூடங்களுக்காக விநியோகிக்கப்படும் கணனிகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடப் பகுதிகளைப் பயன்படுத்துவதற்கு DLI ஆகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்படும் செலவினங்கள் செயற்திட்ட DLIகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் நோக்கங்களும் இலக்குகளும் பொதுக் கல்வி முறைமையின் தரத்தை உயர்த்துவதும், நிர்வாகத்தை வலுப்படுத்துவதுமாக உள்ள போதிலும் வடமேல் மாகாணத்தின் விவசாய உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், வீட்டு விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் அழகியல் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2020 முதல் 2023 வரை ரூபா 31 மில்லியன் தொகை செலவிடப்பட்டது. | பாடசாலைகளில் நூலகங்கள், விவசாய பிரிவுகள், விளையாட்டுப் பிரிவுகள், வீட்டு விஞ்ஞான பிரிவுகள் போன்றவற்றை எளிதாக்குவதன் மூலம் மொத்தப் பாடசாலை தர உத்தரவாதம் மற்றும் பாடசாலை தரத்தை மேம்படுத்துதல் இலக்கிடப்பட்டதுடன் இதற்காக செயற்திட்டத்தின் அங்கீகாரம் பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளரிடம் பெறப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 2023 ஒக்தோபர் 25 இல் மன்னார் வலயக் கல்வி அலுவலகத்திற்குக் கையளிக்கப்பட்ட 10 செயற்பாட்டு மேசை தொகுதிகளும் 2024 மார்ச் 22 இல் வழங்கப்பட்ட 121 ஆசிரியர் கதிரைகளும் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் தொழில்நுட்ப விபரக்குறிப்பில் சீர்செய்யப்படாததாலும், பல்வேறு குறைபாடுகளாலும் வலயக் கல்வி அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப விபரக்குறிப்புகளுடன் இணங்காத தளபாடங்கள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது, மேலும் தொழில்நுட்ப விபரக்குறிப்புகளின் பிரகாரம் தளபாடங்கள் மறுசீரமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | யா/புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம் மற்றும் யா/உறும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு 2023 திசெம்பர் 12 இல் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான 50 மடிக்கணனிகள் ஒவ்வொன்றும் 25 மடிக்கணனிகள் 2024 யூன் 11 வரை பயன்படுத்தப்படாமல் இருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | செயற்திட்டத்தின் DLI இன் முக்கிய பயனாளிகள் இதன் நேரடிப் பயனாளிகளாக உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்வி மற்றும் முகாமைத்துவ பதவியணியினராக உள்ள போதிலும் அதற்கு அப்பால் 2019 முதல் 2022 வரை கணனிகள், ரப் (Tab), அச்சிடல் இயந்திரங்கள், நகல் பிரதியிடல் | படசாலை ஆசிரியர்களுக்கு முறையாக சம்பளம் வழங்குவதற்காக இந்த அச்சிடல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் இது ஆசிரியர்களின் ஊக்கம், கற்றல் செயற்பாட்டின் செயற்திறன் மற்றும் வினைத்திறன் | செயற்திட்டத்தின் நிதிகள் விநியோக இணைப்பு குறிகாட்டி (DLI) உடன் சீரமைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு தொடர்பாக வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வலய அலுவலகங்களால் ரூபா 54 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. | ஆகியவற்றை தெரிவிக்கிறது.<br><br>மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டின் திட்டமிடல் மற்றும் வினைத்திறன் அபிவிருத்தியை எளிதாக்குவதற்கும், முறையான முகாமை, கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை செயன்முறையை வலுப்படுத்துவதற்கும் நகல் பிரதியிடல் இயந்திரங்கள், கணனிகள், மர தளபாடங்கள், மடிக்கணனிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. | |
| (ஊ) | வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வலய அலுவலகங்கள் மூலம் ஆசிரியர் விடுதிகள் மற்றும் அதிபர் விடுதிகளை புனரமைப்பதற்கும் திருத்துவதற்கும் செயற்திட்ட நிதியில் இருந்து ரூபா 24 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது, எனினும், அந்த நடவடிக்கைகளுக்காக எந்தவொரு பணவளிப்பு இணைப்பு குறிகாட்டியிலிருந்தும் (DLI) ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | நியாயப்படுத்தல் அறிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டம் மற்றும் ஏனைய அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | பணவளிப்பு இணைப்பு குறிகாட்டியின் (DLI) பிரகாரம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் நிதியேற்பாடு இல்லாமல் செலவினம் மேற்கொள்ளப்படக்கூடாது. |

## 2.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | <u>வாரியபொல ஆங்கிலம் மற்றும் கணித அபிவிருத்தி நிலையம்</u> | | |
| (i) | 2023 யூலை 7 முதல் 2023 செப்தெம்பர் 27 வரை 19 கணித நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும், இந்த நிலையத்திற்கு கணித உபகரணங்கள் வழங்கப்படாததுடன் மேல் தளத்தில் சரியான விரிவுரை மண்டபம் மற்றும் கீழ் தளத்தில் ஆங்கில நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரிவில் இருக்கை வசதிகள் வழங்கப்படவில்லை. | அந்த இடத்தில் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரிற்கு தேவையான ஆவணங்களை எடுத்துக்கொள்வதன் மூலம் அந்த பொருட்களின் கொள்வனவு 2024 GEMP திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் இருக்கை வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 4.6 மில்லியன் கிரயத்தில் தொடர் இணைப்பு கற்கள் மற்றும் தண்ணீர் தொட்டி தாங்கி அமைப்பதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இணைப்பு கற்களை பதிக்கும் போது மழைநீர் சரியாக செல்லும் வகையில் செய்யப்படாததுடன், கட்டிடத்தின் பின்புறம் உள்ள தரைப்பகுதி மழைநீர் முறையாக வெளியேறும் வகையில் அமைக்கப்படவில்லை. | பொறியியல் திணைக்களத்தால் மேற்பார்வை செய்யப்படுகிறது. இது தொடர்பில் மாகாண பொறியியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கல் பிடியை தரமாக பராமரிக்காததற்கு மேற்பார்வை பொறியியலாளர் பொறுப்பேற்று மழைநீர் வடிகால் அமைப்பதற்கு நிலத்தை தயார் செய்ய வேண்டும். |
| (ஆ) | ரலபனாவ கனிஷ்ட வித்தியாலயத்திற்கான 30*25 அடி நூலகத்தை ரூபா 9.3 மில்லியனுக்கு நிர்மாணிப்பதற்காக பெறுகை செயன்முறை மூலம் ஒப்பந்ததாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். உடன்படிக்கையின் பிரகாரம் 2023 மே 02 இல் பணிகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பணிகள் 2023 ஒக்தோபர் 11 வரை பூர்த்தி செய்யப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் 2023 மே 02 இல் இப்பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் பின்னர் 2023 மே 24 வரை 22 நாட்கள் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 30 ஆம் திகதிய மாகாண கல்வி பணிப்பாளரின் டபிள்யூ/ஏடிஎச்வைஏ/பிஏஜீஜ/18/விஜஜீ ஏ/22/2022 ஆம் இலக்க கடிதத்தில் இது தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மே 25 இற்குப் பின்னர், அதிகபட்ச வரம்பு வரை தாமதக் கட்டணம் அறவிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. | பணி பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் காலதாமதக் கட்டணங்களை அறவிடுவது குறித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் செயற்திட்டப் பணத்தில் ரூபா 7.2 மில்லியன் பம்பல கல்வி அபிவிருத்தி நிலையத்திற்கான நீர் வழங்கல் முறைமை மற்றும் பாதுகாவலர் அறையை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | இந்த நிலையம் DLI 1, 2 மற்றும் GEM செயற்திட்டத்தின் ஏனைய அனைத்து DLIகளுடன் தொடர்புடைய பாட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துவதில் பெரும் உதவியாக இருக்கும் என்பதால், அந்த DLIகள் தொடர்பாக இந்த நிலையம் உருவாக்கப்பட்டது. | ஏற்படும் செலவினங்கள் செயற்திட்ட DLIகளுடன் இணங்குதல் வேண்டும். |

**3. செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 26,924 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 83.12 மில்லியன் மொத்த தொகை செலவிடப்பட வேண்டியிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,697 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 32.30 சதவீதமாகும். | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | காலதாமதத்தை ஈடுசெய்வதற்கு நிறைவேற்று முகவர்களால் நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | செயற்திட்டத்திற்கு தனியாக நிதி பெறப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான அடிப்படை புத்தகங்கள் மற்றும் கணக்குகள் முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்துக்கான கணக்குப் புத்தகங்களை தனித்தனியாக பேணுமாறு மாகாண அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. | புத்தகங்கள் மற்றும் கணக்குகளை முறையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விநியோகத்திற்குப் பின்னர் உபகரணங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக பின்தொடரப்படவில்லை. | உபகரணங்களை முழுமையாகப் பயன்படுத்துமாறு அனைத்து அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பிராந்திய கல்வி அலுவலகங்கள் ஊடாக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. | பின்தொடர்தல் நடைமுறைகள் பொறுப்பான தரப்பினரால் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மறுசீரமைப்பு ஆவணத்தின் பின்னிணைப்பு 01 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் சுகாதார, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண கல்வி அதிகாரசபைகளின் உள்ளக பிரிவுகளால் செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிற போதிலும் செயற்திட்டத்தின் உள்ளக கணக்காய்வு பணிகள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |